# பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள் - கழகத்தினர் மரியாதை!




தென்னகத்தின் பெர்னாட்ஷா, அறிவுலக மேதை, பேரறிஞர் அண்ணாவின் 118வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துச்சாமி தலைமையில் பன்னீர்செல்வம் பூங்கா மற்றும் வீரப்பன்சத்திரம் பகுதியில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, வி.சி.சந்திரகுமார், ஜெ.வீரமணி, மா.சு.ராதாகிருஷ்ணன், குறிஞ்சி என்.சிவக்குமார், மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், செல்லப்பொன்னி, ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, ப. மணிராசு, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியன், ஒன்றிய கழக செயலாளர்கள் சென்னிமலை ப.செங்கோட்டையன், மொடக்குறிச்சி சு.குணசேகரன், ஊத்துக்குளி ராஜா, பகுதி கழக செயலாளர்கள் வி.சி.நடராஜன், அக்னி டி. சந்திரசேகரன், பொ.ராமச்சந்திரன், வேசெல்வராஜ், குறிஞ்சி என்.தண்டபாணி குமாரவடிவேல் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தனசேகரன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் கழக இளைஞரணிச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கி நகராட்சி, பேருந்து நிலையம் அருகில்,பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளினை முன்னிட்டு,பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் உதயம் சண்முகம், அறந்தாங்கி நகர செயலாளர் க.ராஜேந்திரன், அறந்தாங்கி நகராட்சி தலைவர் இரா.ஆனந்த் ,ஒன்றிய கழக செயலாளர்கள் சக்தி ராமசாமி, பொன் கணேசன், எல். குமார்(எ) துரைக்கண்ணு , கே.எஸ்.ரவி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், ஹரி விமலாதி, சக்திவேல், கருணாகரன், சிவ.பால இளங்கோ, செல்லத்துரை, மணிமொழியன், , எம்.டி.சரவணன், ஆவுடை யூனூஸ், மற்றும் கழக மாநிலமாவட்ட ஒன்றியபேரூர்ஊராட்சி கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



கழக சட்டத்திட்ட திருத்தக்குழு தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் அலுவலகத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு அண்ணா திருவுருவப் படத்திற்கு சு.கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துசெல்வம், சுந்தர.ஜெயபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.



சேலத்தில் பேரறிஞர் அண்ணாவின் 118 வது பிறந்த தினத்தையொட்டி சேலம் மாநகராட்சியில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மேயர் ஆ.ராமச்சந்திரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் மாமன்ற உறுப்பினர்கள் இருந்தனர்.





தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு தஞ்சை கலைஞர் அறிவாலயம் வாயில் உள்ள அண்ணா சிலைக்கும் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா சிலைக்கும் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் ச.முரசொலி எம்.பி, முன்னாள் எம்.எல்.ஏ க்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.ரெங்கசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாநில கழக நிர்வாகி சி.இறைவன், மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், தஞ்சை மேயர் அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, மணிமாறன், கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு கும்பகோணம் மாநகர தி.மு.க சார்பில் மகாமக குளம் அருகில் உள்ள அண்ணா திருவுருவச்சிலைக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் தலைமையில் சு. கல்யாணசுந்தரம் எம்.பி, முன்னாள் அமைச்சர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி செ.இராமலிங்கம், மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர், சுந்தர.ஜெயபால் உள்ளிட்ட பகுதிச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகரக் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், முன்னாள் இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.




புதுக்கோட்டையில் பேரறிஞர் அண்ணா 118 வது பிறந்தநாளையொட்டி புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.




தென்னகத்தின் பெர்னாட்ஷா அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் 118வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டம் பவானி நகரத்தில் பா.சீ.நா.இளங்கோவன் ஏற்பாட்டில் அலங்கரிக்கப்பட்ட அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு நகரமன்ற தலைவர் சிந்தூரி இளங்கோவன் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தி, பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் கழக நெசவாளரணி துணை செயலாளர் கே.சரவணன், மொழிப்போர் தியாகி பா.சு.வடிவேல் மாவட்ட பிரதிநிதி வா.நல்லசிவம், நகர்மன்ற உறுப்பினர்கள் ரஷ்யா பேகம், கெஜலட்சுமி, இளைஞர் அணி அமைப்பாளர் இந்திரஜித் துணை அமைப்பாளர் யுவராஜ், வார்டு செயலாளர்கள் முத்துவேல் ரவி தளபதி, அண்ணா, ஜோதி, ஓ.கே. மோகன் முகமது ஷாகித் வழக்கறிஞர் செந்தில், வெங்கடேஷ், ஐடி விங் தென்னரசு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.